ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

त्यक्तैषणात्रयमपेक्षितमोक्षमार्गा
भैक्षामृतेन परिकल्पितदेहयात्राः ।
ज्योतिः परात् परतरं परमात्मसंज्ञं
धन्या द्विजा रहसि हृद्यवलोकयन्ति ॥ धन्याष्टकम् ॥

த்யக்தைஷணாத்ரயமபேக்ஷிதமோக்ஷமார்கா
பைக்ஷாம்ருதேந பரிகல்பிததேஹயாத்ரா: ।
ஜ்யோதி: பராத் பரதரம் பரமாத்மஸம்ஜ்ஞம்
தந்யா த்விஜா ரஹஸி ஹ்ருத்யவலோகயந்தி ॥ தந்யாஷ்டகம் ॥

சிலமஹான்கள் புத்திரேஷணை, தாரேஷணை, வித்தேஷணை அதாவது தம்புதல்வனிடமும் பெண்டீரிடமும் பொருளிடத்திலும் இருக்கும் ஆசையைவிட்டுப் பசி ஏற்பட்டகாலத்தில் ஆங்காங்குசென்று யாசித்துக் கிடைக்கும் பிக்ஷை என்னும் அமிருதத்தையுண்டு சரீரத்தைத் தரிப்பவர்களாய்க்கொண்டு மோக்ஷமார்க்கத்தில்செல்லவேண்டுமென்கிற விருப்பத்துடன் எல்லாவற்றிலும் மிகச்சிறந்ததாயும் பரமாத்மாவென்று பெயர்பெற்றதுமான ஜோதியை தாமிருக்கும் நிலமையைப் பிறர் அறியாமலிருக்கும்படி ரகஸ்யமாக ஹிருதயத்தில் தியானத்து சகல துக்கங்களையும் போக்கிப் பரமானந்தத்தையடைந்து கொண்டிருக்கிறார்கள்.

எவருக்கும் துக்கத்தையடையாமல் எப்பொழுதும் சுகமாகவே இருக்கவேண்டுமென்கிற எண்ணமிருப்பது ஸகஜமே? அவ்விதத்தோற்றத்திற்குற்ற ஸாதனம் எது என்பதைமாத்திரம் கவனிப்பவர்கள் அரிதிலுமரிதே. ஸாதனமன்றியில் ஸாத்தியமான சுகத்தைப்பெற ஸாத்தியமில்லையெனக்கருதி ஒருவனுக்கு உண்மையான சுகத்தைப்பெற விருப்பமிருப்பின் இங்கு காட்டிய மஹான்களின் நடத்தையைப் பின்பற்றவேண்டும் என்று அறிவிக்கிறார்.

சுபம்.

உபபத்திராதிபர்.

2-18

ஆர்ய தர்மம்.
க்ஷய ஹூ பங்குனி-மீ உருவ

# சம்மதவயது மசோதாவுக்கு மறுப்பு.

தற்காலம் நம் இந்தியாவிற்கும் ஸநாதனதர்மத்திற்கும் அதை அனுஷ்டிக்கும் பிராமணர் வைச்யர் முதலான சில ஸமயிணர்களுக்கும் நேர்ந்திருக்கும் கஷ்டங்களை ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனாலும் கூறவியலாதென்பது பலரும் அறிந்தவிஷயமே, நம்மால் பலகாரணங்களால் அனுஷ்டிக்கமுடியாமல் விடப்பட்டவைபோக பாக்கியிருக்கும் சிற்சில தர்மங்களையாவது நாமுள்ளவரையில் அனுஷ்டிப்போமென்று ஊக்கத்துடன் முன்வந்து அனுஷ்டிக்கும் சில ஆஸ்திகர்களுக்கு நம ஸநாதன தர்மத்தைப் பூராவும் இவ்வுலகத்தைவிட்டுத்தூரத்தவேண்டுமென்று கங்கணம் பூண்டு கொஞ்சகாலமாய் வேலைசெய்யும் பல பெரியோர்களால் செய்யப்படும் கஷ்டத்தை யாரால்கூறமுடியும். பலவிடங்களிலும் செலாவணியுள்ள வாக்கைப்பெற்ற சிலர் தம்வாக்கை எந்தவழியில் உபயோகப்படுத்துவது தர்மம். எது அதர்மம் என்பதையும் இவ்வுலகிலுள்ள ஆஸ்திகர்களின் நிந்தையையும் பாபச்செயலால் பரலோகத்தில் அநுபவிக்கப்படும் நரக துக்கங்களையும் அற்பங்கூடக்கருதாமல் தர்மம் என்கிற பதத்தை மாத்திரம் அறிந்துகொண்டுலோகக்ஷேமத்தைக்கருதிப்பாடுபடுகிறோமென்று பறையறைந்துகொண்டு கலிரூபமாக இவர்களே இருந்துகொண்டு கொடியகஷ்டங்களை அனுபவிப்பதற்குக் காரணமான அதர்மத்தைப் பலவிதமாக ஸ்தாபித்துக்கொண்டு வருகிறார்கள். அதிலும் ஸ்திரீகள் விஷயத்தில் கருணையுடன் மிக்கக்கவலைகொண்டு அதிக வேலை செய்துவருகிர்கள். விதவாவிவாகம் ருதுமதீவிவாகம்கலப்பு விவாகம் முதலியவிவாகங்கள் சாஸ்திரீயமென்றும் அவசியம்செய்யவேண்டுமென்றும் அதினால்தான் நம்தேசத்திற்கு க்ஷேமமென்றும் புஸ்தகங்களாலும் பத்திரிகை மூலமாகவும் பிரஸங்கவாயிலா

கவும் வெளியிட்டு சாமான்யஜனங்களை வஞ்சித்துப் பாழுங்கிணற்றில் தள்ளுவதற்கு வேண்டிய காரியங்களை விரைவாகச்செய்து கொண்டுவருகிறார்கள். ஸ்திரீகளிடம்இருக்கும் கருணைப்பெருக்கு இம்மட்டோடு அடங்காமல்ஸமீபகாலத்தில் ஒருவர் சம்மதவயது மசோதா என்று ஒருமசோதாவையும் சட்டசபையில் பூரவிட்டுப் பாஸாகும்படி வற்புறுத்துகிறார். நமக்கு ஸம்பந்தமில்லாவிட்டாலும் ஸமயம் நேர்ந்திருப்பதால் இந்தவிஷயத்தையும் கவனிக்காமலிருக்கமுடியவில்லை. அதாவது நம் அரசாங்கத்தில் சட்டசபையையும் அதற்காகப் பலமெம்பர்களையும் ஏற்படுத்தியிருப்பது புதிதல்ல. முற்காலத்திலும் இவ்விதமுண்டு. ஆனால் அதற்குப்பரிஷத் என்று சாஸ்திரங்களில் பெயர் ஏற்பட்டிருக்கின்றது. இச்சபை மூன்றுவிதமாகும். அரசாங்கஸபை, மதஸபை, கிராமஸபை என்பவைகளே. இதிலிருந்தும் விரிவும்செய்யலாம். சுருக்கமாய் இம்மூன்றுஸபைகள் அவசியமென்று காண்பிவிக்கப்பட்டன. ராஜாங்கஸபை என்றால் அந்தந்த அரசர்களின் ஆளுகைக்குள்பட்ட தேசங்களிலிருக்கும் பிரஜைகளுக்கோ மற்றுமுள்ள பிராணிகளுக்கோ அவ்வக்காலங்களில் இயற்கையாய் நடைபெறவேண்டியகார்யங்களுக்கு இடையூர் ஏற்பட்டு ஜனங்கள் கஷ்டப்பட்டால் அந்தக்கஷ்டத்தை எவ்விதம் நிவிருத்திசெய்து ஜனங்களுக்கு க்ஷேமத்தையுண்டுபண்ணலாமென்று யோசித்து நடத்தவேண்டியதற்காக ஏற்படும் ஸபையேயாகும். ஆங்காங்கு பலவிதமானகஷ்டங்கள் ஏற்படுமாகையால் அவைகளை நன்கறிந்தவர்கள் மெம்பராக இருந்தால்தான். அந்தந்த தேசத்தின் கஷ்டங்களை அந்த மெம்பர்மூலம் அரசாங்கத்தார் அறிந்து நிவர்த்திசெய்ய முடியுமென்று பல மெம்பர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் ஆகையால் அந்தந்த மெம்பர்களும் தம்தம் தேசத்திலுள்ள பிரஜைகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் கஷ்டங்களை ஸபையிலறிவித்து சாஸ்திரவிரோதமின்றி அதிக கஷ்டங்களை விலக்கி அவர்களுக்கு ஸௌக்யத்தைச் செய்ய முயற்சிக்கவேண்டியது அவசியமேயல்லாமல் சாஸ்திர ஸம்பந்தமாயும் மதஸம்பந்தமாயுமுள்ள கார்யங்களில் இவர்கள் தலையிடுவது நியாயமாகாது. மதஸம்பந்தமான கார்யங்கள் பூராவும் சாஸ்திரங்களையும் பெரியோர்களின் அனுஷ்டானங்களையும் முக்கியமாய்க்கொண்டு தீர்மானிக்கவேண்டிய விஷயங்கள். அவைகளில் நாம் பிரவேசித்

தால் பலவாரான தவறுநேரும். வீணாகப்பாபம் ஸம்பவிக்கும் என்று கருதியே மிகவும் சிறந்த புத்தியையுடையவர்களும் ஸநாதனதர்மத்தைக் கைவிடாமல் அவசியம் பரிபாலிக்கவேண்டுமென்கிற கருணைகொண்டவர்களுமான விக்டோரியாகனம் மஹாராணியவர்கள் மதஸம்மந்த விஷயங்களில் தாம் ஸம்மந்திப்பதில்லை என்று வாக்களித்திருக்கிறார்கள். இதினால் மதஸம்மந்தமாயும் சிறந்த பண்டிதகோஷ்டிகளால் சாஸ்திரார்த்தங்களை நன்கு விசாரித்து முடிவுசெய்யவேண்டிய தர்மவிஷயங்களை ராஜசபைக்கி மசோதாவாகக் கொண்டுவருவது உசிதமில்லையென்று நன்குவிளங்கவில்லையா இவ்வித விஷயங்களையும் ராஜஸபையில் புகும்படி செய்து சாஸ்திரவிரோதமாக தர்மஸ்தாபனம் ஏற்படுகிறபடியால் வியவகாரம் அதிகரித்து ஜனங்களுக்கும் பலகஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்த அபிப்பிராயத்தையே

विधिनिषेधानुपलभ्य विहितानुष्ठाने प्रतिषिद्धवर्जने च उत्पन्न उत्साहः तेन साध्यो धर्मनामकः पदार्थः यदाविच्छिन्नो भवति तदानीमयं विवादः उपपद्यते असति तु धर्मविच्छेदेनास्ति व्यवहारस्यावकाशः । अतएव नारदः —

मनुः प्रजापतिर्यस्मिन् काले राज्यमभूभुजत् ।
धर्मैकतानाः पुरुषास्तदासन् सत्यवादिनः ॥
तदा न व्यवहारोऽभूत् न द्वेषो नापि मत्सरः ।
नष्टे धर्मे मनुष्येषु व्यवहारः प्रवर्तते ॥ इति ।

𑌵𑌿𑌧𑌿𑌨𑌿𑌷𑍇𑌧𑌾𑌨𑍁𑌪𑌲𑌭𑍍𑌯 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌵𑌰𑍍𑌜𑌨𑍇 𑌚 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨 𑌉𑌤𑍍𑌸𑌾𑌹𑌃 𑌤𑍇𑌨 𑌸𑌾𑌧𑍍𑌯𑍋 𑌧𑌰𑍍𑌮𑌨𑌾𑌮𑌕𑌃 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌃 𑌯𑌦𑌾 𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑌯𑌂 𑌵𑌿𑌵𑌾𑌦𑌃 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌅𑌸𑌤𑌿 𑌤𑍁 𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍇𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌸𑍍𑌯𑌾𑌵𑌕𑌾𑌶𑌃 । 𑌅𑌤𑌏𑌵 𑌨𑌾𑌰𑌦𑌃—

𑌮𑌨𑍁𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌾𑌲𑍇 𑌰𑌾𑌜𑍍𑌯𑌮𑌭𑍂𑌭𑍁𑌜𑌤𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑍈𑌕𑌤𑌾𑌨𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌸𑍍𑌤𑌦𑌾𑌸𑌨𑍍 𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ॥
𑌤𑌦𑌾 𑌨 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍋𑌽𑌭𑍂𑌤𑍍 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍋 𑌨𑌾𑌪𑌿 𑌮𑌤𑍍𑌸𑌰𑌃 ।
𑌨𑌷𑍍𑌟𑍇 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥ 𑌇𑌤𑌿।

சாஸ்திரங்களில் கூறப்பட்டவிதிநிஷேதங்களை நன்கறிந்துவிஹித தர்மத்தை அனுஷ்டிப்பதாலும் விலக்கவேண்டியதை விலக்குவ தாலும் உத்ஸாகம் உண்டாகின்றது. அவ்வித உத்ஸாஹத்தால் தர்மமென்கிற பதார்த்தமானது விருத்திபண்ணத்தகுந்தது. இவ் விதம்நடைபெறவேண்டிய தர்மமென்கிறவஸ்துவிற்கு எப்போது குறைவேற்படுகின்றதோ அந்தஸமயம் அதிகமான வியவகார மேற்படுகின்றது. இதைத்தான் மனு என்கிற பிரஜாபதியானவர் எந்தஸமயத்தில் ராஜ்யபரிபாலனம் செய்தாரோ அந்த ஸமயம் ஸகலஜனங்களும் ஸத்யம் தவறாதவர்களாயும் தர்மத்திலேயே அதிகப்பற்றுதலையுடையவர்களாயும்இருந்தார்கள். அக்காலத்தில் ஒருவருக்கொருவர் துரோதம் த்வேஷம் முதலிய யாதொன்று மில்லை ஒருவிதமான கோர்ட் வியவஹாரமும்கிடையாது. மனிதர் களிடம் தர்மானுஷ்டானத்திற்குக் குறைவேற்பட்டவுடன் வியவ காரம் அதிகமாயிருக்கிறது என்று நாரதர் மொழிந்திருப்பதாக பராசரஸ்மிருதியில் ஆசாரகாண்டத்தில் ஸ்ரீ மாதவாசார்யர் கூறி யிருக்கின்றார். இம்மஹான் வெளியிட்டிருப்பது தற்காலம் நமக் குப்பிரத்யக்ஷமாய் அனுபவத்தில் வந்துவிட்டது. மகாகனம் பொருந்திய விக்டோரியாமகாராணிஅவர்கள்மதப்பற்றுதலிற்கும் தர்மத்திற்கும் அற்பம்கூட இடையூறின்றி ராஜ்யபரிபாலனம் செய்யுங்கால் நம்தேசத்திற்கிருந்த செழிப்பு இப்போதிருக்கின் றதா? அக்காலத்தில் ஜனங்களுக்கிருந்த ஒற்றுமை தற்காலமிருக் கின்றதா? அப்போது இருந்தநியாயஸ்தலங்கள் போதாமல்பிறகு அதிகமாக எவ்வளவு ஸ்தலங்கள் ஏற்பட்டிருக்கின்றன இதற்குக் காரணம் சாஸ்திரங்களில் சொல்லிய அதர்மத்தின் அபிவிருத் தியைத்தவிர்த்து வேறுயாதுகூறமுடியும். இதுவரையில் கூறியவிஷ யங்களால் மதஸம்மந்தமான கார்யங்களையுத்தேசித்து அரசாங்க ஸபையில் மெம்பர்களால் எவ்விதமசோதாவும் கொண்டுபோவது நியாயமில்லை என்று ஏற்பட்டது. அப்படியாராவது கொண்டுவந் தாலும் காருண்யமுள்ள கவுண்மெண்டார் அதை ஏற்காமல்விலக் குவதே சாஸ்திர ஸம்மதமாகும். இங்கு விலக்கப்பட்ட மதஸம் மந்தமான கார்யங்களில் சந்தேகமேற்பட்டால் அதை சாஸ்திரங் களை நன்கு ஆராய்ச்சிசெய்து அவைகளின் ஸித்தாந்தப்படி காம க்ரோதத்தைவிட்டு சரியாய் தீர்மானம் செய்யவேண்டியது பண் டிதர்களின் பொறுப்பாகும். அதற்காக அந்தஸபை அவ்விதம்

அந்தஸபையில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்களை அவரவர்களுடைய மதாசார்யர்களான மஹான்களிடம் அறிவித்து அவர்களுடைய ஆக்ஞானுஸாரம் தர்மானுஷ்டானங்களைச் செய்யவேண்டும். மூன்றாவதுஸபை அந்தந்தக்கிராமங்களிலும் ஜனங்களுடைய ஸௌக்கியத்திற்காகச் செய்துகொள்ளவேண்டிய பொதுக்கார்யத்தையுத்தேசித்ததாகும். இந்தவியவஸ்தைகளைவிட்டு அரசாங்கஸபையில் விசாரிக்கவேண்டிய விஷயத்தைப் பண்டிதஸபையிலோ மற்றஸபையிலோ விசாரிப்பதும் இதர ஸபைகளில் விசாரிக்கவேண்டிய விஷயங்களை அரசாங்கஸபையில் கொண்டுபோவதும் உசிதமில்லை என்பது திண்ணம். இனி ப்ரகிருத விஷயத்தை விசாரிப்போம். இப்பொழுது சம்மத மசோதாவைக் கொண்டுவந்திருப்பவர் வைதிகதர்மாபிமானிகளான ஆஸ்திகர்களுக்குற்றசுருதி ஸ்மிருதி புராணம் முதலியவைகளிற் கூறப்பட்ட விதிவிலக்குகளைப் பின்பற்றாதவராகத் தெரிகின்றது. அரசாங்கஸபையில் கொண்டுவரப்படும் மசோதாக்களும் அவைகளின் தீர்மானங்களும் ஸகலஜாதி மதங்களுக்கும் ஸௌகர்யமாயிருக்கவேண்டுமேயன்றி சிலமதஸ்தர்களுடைய ஸௌகர்யத்தையுத்தேசித்து மாத்திரம் பொதுவாய் ஒருமசோதாவைக் கொண்டுவருவது எப்படி உசிதமாகும். தற்காலமிவர் கொண்டுவந்திருக்கும் இந்தமசோதாவானது வைதிகமதாவலம்பிகளான ஆஸ்திகர்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் நேர்விரோதமாயிருக்கென்று எந்த ஸநாதன தர்மாபிமானிகளாலும் சொல்லாமலிருக்கமுடியாது. மேலும் இந்துக்களில் பெரும்பாலோர் இப்பவும் சுருதிஸ்மிருதிகளில் கூறப்பட்ட விதிவிலக்குகளையனுஸரித்து தர்மானுஷ்டானங்களைச் செய்துவருகிறார்கள். சாஸ்திரமென்றால் ஆத்திரம் கொள்பவரும் ஸ்மிருதிஎன்கிற ஸ்மரணம்கூட இல்லாதவரும் புராணத்தை புராணமென்று இகழும் நிலமையிலிருக்குமொருவர் இவர்களுக்கு க்ஷேமத்தைச் செய்வதாகக்கருதி சாஸ்திரங்களுக்கு முரணாக ஒரு மசோதாவைக்கொண்டுவந்தால் இதினால் ஆஸ்திகர்களுக்கு மனவருத்தம் அதிகமாக ஏற்படுவதைத்தவிர்த்து அற்பமேனும் ஸௌகர்யமேற்படுமென்று சொல்வதற்கிடமுண்டா? உண்மையில் இவர் ஜனங்களுடைய க்ஷேமத்தைக்கருதியவராயிருந்தால் இந்தமசோதாவை அரசாங்கஸபைக்குக் கொண்டுவருவதற்குமுன் பொதுஜனங்களுடைய அபிப்பிராயம் இந்தவிஷயத்தில் எப்படியிருக்கென்றுமுந்தி

அறிந்தாரா அவ்விதமறிந்திருந்தால் சென்னைராஜதானியின் கண்ணுய்விளங்கும் தஞ்சை திருச்சி முதலான ஜில்லாக்களில் எந்தெந்த இடங்களில் எத்தனை ஸபைகூட்டப்பட்டது. அப்படிக் கூட்டப்பட்ட ஸபையில்வந்த எந்தெந்த வித்வான்கள் இதை உசிதமென்று அங்கீகரித்திருககிருர்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் 2 3-க்குக்குறையாமல் பெரியஸபையை ஏற்படுத்திப் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை அற்பமேனுமுணராமல் தமக்குத் தோன்றியதையெல்லாம் ஜனங்களுடைய ஹிதத்திற்காகச் செய்கிறேனென்று வெளிப்பகட்டாக வார்த்தைகளைப்பேசி மசோதாவாகக்கொண்டுவந்து பல ஜனங்களுக்கும் கஷ்டத்தையுண்டுபண்ணுவதுதானு தர்மம். பொதுவிஷயத்தில் பொதுஜனங்களுடைய நோக்கத்தையறிந்து நடத்தவேண்டுமேயன்றி இந்தமசோதா பாஸாஞல் அதினுலுண்டாகும் கஷ்டத்திற்குப் பாதியப்படாதவர்களும் தம்மிடத்தில் அபிமானமுள்ளவர்களுமான சிலர் அபிப்பிராயம் குடுத்தாலும் அதை எப்படிப்பிரமாணமாகக் கொள்ள முடியும்? சாஸ்திர விரோதமிருந்தாலும் இந்த மசோதாவினுல் ஜனங்களுக்குப் பெரிய ஸௌகயம் மூட்டையாக ஏற்படுமெனகிருரே அதாவது கிடைக்குமா என்று ஆலோசித்தால் அற்பங்கூட இல்லை. அதிககஷ்டமுண்டு. இது நிச்சயம். இதையும் விளக்கிக் காட்டுகிறேம். இந்தமசோதா பாஸானுல் அதினுல் ஏற்படுவதாக இவர்கூறும பிரயோஜனமாவது தம்பதிகளுக்குச்சரீரபுஷ்டி ரோகமில்லாமலிருப்பது சிறுவயதிலேயே தாயார் என்கிறபெயர் இல்லாமை, சிசுகளுக்குத் தீர்க்காயுஸ், ரோகமில்லாமலிருப்பது முதலான இவைகள் ஏற்படும என்பதேயாகும். இந்த மசோதாவினுல் 16 வயதுக்கு முன்னே அல்லது 14 வயதிற்கு முன்னதாகவோ தம்பதிகளுக்குக் கூடாதென்று நிஷேதிக்கப்படும். கிருஹஸ்ததர்மமானது எக்காலம்தொட்டு உலகில் நடைபெற்றுவருகிறதென்பதை எவராலும் நிச்சயமாய் கூறவியலாது.

ஆயிரக்கணக்கான வருஷங்களாக அனுஷ்டானத்திலிருந்து வருவதாக இவரும் ஒப்புககொண்டுதான் தீரவேண்டும். 13-வது வயதில் ஸ்திரீ கிருஹஸ்ததர்மத்தையடைந்தால் அதினுல் தற்கா

கம் ஏற்படுவதாகச் சொல்லப்படும் கஷ்டம் மூற்காலத்திலும் இருந்தே தீரவேண்டும். அப்படி யிருந்ததாகத்தெரியவில்லை. இப்பவும் 13ஆவதுஆண்டில் பதியின வீட்டுககுச்சென்று அதுமுதல் பல குழந்தைதைகளைப்பெற்று தாமும்குழந்தைகளும் ரோகமென்றால்இன்னதென்றுஅறியாததிருடமானசரீரத்தைப்பெற்றுதீர்க்காயுளுடன் 60, 70, வயதான தாய்மார்களும் அவர்களுடைய 50, 55, வயதான பல குழந்தைகளும் சுகமாக வாழ்ந்து வருவதைப் பலரும் பார்க்கலாம். இவர்களுக்கு சரீரதுர்பலமும, ரோகமும், அற்பாயுளும் ஏன்வரவில்லையோ தெரியவில்லை. ஸமீபகாலத்திலும் இந்தமாதிரி பதிகிருததையடைந்த பல ஸ்திரீகள் குழந்தைகளுடன் சுகமாக வசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் விசாரித்தால் நன்குபுலப்படும். சென்ற 31—3—27 வியாழககிழமை மித்திரனில் ஸம்மதவயது மசோதா ஹிந்துமாதர்களின் கண்டனம் என்று தலையங்கமிட்ட ஒருவியாஸம் வெளிவந்திருக்கிறது. அதைப்பலருமறிந்திருக்கலாம். அதில் 90 வயதுள்ள ஒருகிழவி பேசுகையில கூறியதாவது:—எனககுப்பால்யத்திலேயே விவாகமாகியது எனக்கு 13 குழந்தைகளிருக்கின்றன. என்குழந்தைகள் எல்லாருக்கும் பேரனபேத்திகளகூட யிருககின்றன. எனது கணவனும் தேகதிடத்துடனிருக்கின்றார். இவ்வளவுவயதாயும்எனக்கு ஒருபல்லுககூட விழவில்லை. என் புடவைகளைத்தோய்த்து சமயல் கூடச்செய்கின்றேன் வைத்தியர்கள பால்யவிவாகததில் சீக்கிரம் மரணம் ஸம்பவிக்கும் என்பதை நான் மறுககிறேன. நான் மருநதுககாக வைத்தியரிடம் ஒருநாட்கூடச் சென்றதில்லை. முன்னம் ஒவ்வொரு ஹிந்துக்குடுமபஸ்திரீகளுககும் வீட்டுக்குவேண்டிய வைத்தியமுறைகள் தெரியும். தற்காலஸ்திரீகள் டாகடர்களையே நம்பிவாழ்வதால் அவர்கள் இத்தகைய கெட்ட மசோதாக்களைக் கொண்டுவருகின்றார்கள். வயதுவந்தபிறகு நடக்கும் கல்யாணங்கள் மதஸம்மந்தமான கல்யாணமாசு இல்லாமல் மிருகங்களின் கல்யாணத்தை ஒக்கும் என்று சொல்லியிருக்கிறாள். இவ்விதம் அனுபவித்தவள் சொல்லும் அனுபவத்தையும் நமமால் பிரத்தியக்ஷத்தில் அறியப்பட்டதையும் சரியல்லவென்று ஒருவர் யுகதிவாதம் செய்தால் அது எப்படிப்பொருந்தும். ஆனல், தற்காலத்

தில் நம்தேசத்தில் மரணமும் வியாதிகளும் அதிகமாகஇருக்கின்றனவென்பதை யாரும் மறுக்கமுடியாது. அதற்குக்காரணம் இவர்கூறுவது ஒருக்காலும் பொருந்தாது. நியமமில்லாமல் செய்யும் போஜனத்தாலும் சரீரத்திற்கு ரோகத்தைக்கொடுக்கும் காபி முதலிய கெட்ட ஆகாரங்களின் பழக்கத்தாலும் அவரவர்களுக்கேற்பட்ட தர்மத்தை அடியோடு கைவிட்டபடியாலும் ஆசாரமில்லாமையாலும் மனிதர்களுக்கு ஆயுஸ் குறைவேற்படுகின்றது. வெகுகாலமாகப் புத்திரபாக்கியத்தைப்பெறாத ஒரு மாதுசிரோன்மணி அரும் தவத்தால் 35-வது வயதில் பகவானுடைய அனுக்கிரகத்தால் ஒரு புதல்வனையடைந்தால் அக்குழவிக்கு நாலுமாதம் சென்றவுடன் வயிற்றில் தோஷமிருக்கென்று . சங்கைகொண்டு வைத்தியரிடம் காண்பிவித்தால் அவர் இக்குழந்தைக்கு ஐந்து மாதத்திய கட்டியிருக்கென்று சொல்லுகிறார். பால்ய விவாகத்தாலா? இந்தமாதிரிஏற்படுகின்றது அல்ல. நம்மால்முன் கூறப்பட்டதே இதற்கெல்லாம் காரணம். இந்த அபிப்பிராயத்தையே மனுவும்

अनध्ययनाच्च वेदानामाचारस्य च वर्जनात् ।
आलस्यादन्नदोषाच्च मृत्युर्विप्रान् जिघांसति ॥

அநத்யயநாச்ச வேதாநாமாசாரஸ்ய ச வர்ஜநாத் ।
ஆலஸ்யாதந்நதோஷாச்ச ம்ருத்யுர்விப்ராந் ஜிகாம்ஸதி ॥

என்று ஸ்பஷ்டமாக வெளியிட்டிருக்கிறார். ஆகையால் இந்த மசோதாவினால் இவர் எதிர்பார்க்கும் பயன்கிட்டாதென்று ஸ்பஷ்டமாய் தெரியவில்லையா? இந்தமசோதா பாஸானால் அதினால் ஏற்படும்கஷ்டம் அதிகமுண்டு. மனிதர்களுக்குப்பொதுவாய் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை இம்மூன்றும்விலகுவது சிரமமென்று ஓர் பழமொழி கூறுவதுண்டு. பிறருடையபொருளை அபகரித்தல் கூடாதென்றும் விதி ஏற்படுத்தி மீறி அபகரிப்பவர்களுக்கு எவ்வளவோ கடுமையான தண்டனையும் அரசாங்கத்தில் நடத்திவருகிறார்கள். அவ்விதமிருந்தும் பொருளிலிருக்கும் அதிக விருப்பத்தால் சிலர் சிக்ஷையைக்கூடப் பொருட்படுத்தாமல் களவுசெய்யத் துணிந்துவிடுகிறார்கள். என்பதைநாம்பிரத்தியக்ஷத்தில் பார்க்கிறோம். இங்கு கூறப்பட்ட மூன்றுகளில் பெண்

ணாசை என்பது பலமானது. காமன்கணைக்கிரையாகாமலிருக்கும் மஹான் அரிதிலும் அரிதே. காமேச்சையுடையவர்கள் பிறகுஏற்படும் கஷ்டங்களைப் பொருட்டாகக் கருதமாட்டார்கள். இந்த அபிப்பிராயத்தையே

लङ्केशोऽपि हतस्त्रिलोकविजयी येनात्मबन्धुप्रजैः
तारेशो गुरुदारभागिति दृढं येनापवादं गतः ।
इन्द्रस्सोऽपि जुगुप्सितां तनुमगाद् येनाशु संमोहितः
कामस्यास्य वशंगतो न भजते कां कामवस्थां च कः ॥

𑌲𑌙𑍍𑌕𑍇𑌶𑍋𑌽𑌪𑌿 𑌹𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑌵𑌿𑌜𑌯𑍀 𑌯𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑍁𑌪𑍍𑌰𑌜𑍈𑌃 𑌤𑌾𑌰𑍇𑌶𑍋 𑌗𑍁𑌰𑍁𑌦𑌾𑌰𑌭𑌾𑌗𑌿𑌤𑌿 𑌦𑍃𑌢𑌂 𑌯𑍇𑌨𑌾𑌪𑌵𑌾𑌦𑌂 𑌗𑌤𑌃 । 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌸𑍋𑌽𑌪𑌿 𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌿𑌤𑌾𑌂 𑌤𑌨𑍁𑌮𑌗𑌾𑌦𑍍𑌯𑍇𑌨𑌾𑌶𑍁 𑌸𑌂𑌮𑍋𑌹𑌿𑌤𑌃 𑌕𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌵𑌶𑌂𑌗𑌤𑍋 𑌨 𑌭𑌜𑌤𑍇 𑌕𑌾𑌂 𑌕𑌾𑌮𑌵𑌸𑍍𑌥𑌾𑌂 𑌚 𑌕𑌃 ॥

மூன்றுலகங்களை ஜயிக்கும் சக்திபெற்ற லங்கேசன் பெண்ணாசையால் ஸகல பந்துஜனங்களோடு மாண்டான். தாரேசனென்கிற திங்களும் குருதார கமனம் செய்தானென்கிற பெரிதான அபவாதத்தை இதினாலேயே அடைந்தான். இதினாலேயே இந்திரனும் சொல்லவியலாத சரீரத்தைப் பெற்றான். ஆகையால் காமனுக்கு வசமான எவரெவர் எந்தெந்தமாதிரிக் கஷ்டத்தைத்தான் அனுபவிக்கவில்லை என்று ஒருவர் அறிவித்திருக்கிறார். பல குடும்பங்களில் சிறுவயதிலிருக்கும் தம்பதிகள்சேர்ந்தே இருக்கும்படி நேருகின்றன. அந்தமாதிரி இடங்களில் 13-வது வயதில் அப்பெண் கிருகஸ்த தர்மத்திற்கு யோக்கியமாயிருந்தால் அவள் புருஷனைக் கூடாதென்று யார் தடுக்கிறது அவன் அவளை கவனிக்காமல் எப்படி இருப்பன். மிகவும் அறிவாளிகளென்று பிரஸித்திபெற்ற கீழ்காட்டியவர்களின் நிலைமையே மாறியிருக்கும்பொழுது சிறுவயதிலிருக்கும் தம்பதிகளுக்குவிவேகம் இருக்குமென்று எப்படிக்கூற முடியும். அவ்விதமுள்ள ஸ்திரீக்குஇவர்கள்ஏற்படுத்திய வயதிற்கு முன்கர்ப்பம் ஏற்பட்டால் அந்த தம்பதிகளுக்கு அபராதம்போடுகிறதா 4 6மீ காவல்என்றால் அந்தஸ்திரீயைஜயிலில்வைக்கிறதா அல்லது பிரஸவத்திற்காக ஆஸ்பத்திரியில் வைக்கிறதா சிலஸ்திரீகள் இந்த நிர்ப்பந்தத்திற்கும் பயந்து கர்ப்பத்தை மாற்ற யத்த

ஷித்துத் தம் சரீரத்திற்கே அபாயத்தையும்தேடிக்கொள்வார்கள். இவ்வித ஸங்கடங்கள் நேராமலிருக்கவேண்டி 12-வது வயதில்ஒரு ஸ்திரீருதுவானல் அவளைப்போதுமான வயதுவருகிறவரையில் ஸர்க்கார் பந்தோபஸ்தில் வைத்துக்கொள்ளும்படி நேரும். அப்படியானல் கவுன்மெண்டில் இதற்காக வேறு அதிகாரிகளும் கட்டடங்களும் ஏற்படவேண்டும். இன்னும்பலவிதமான கஷ்டங்கள் இதினல் நேருமென்பதை நிரூபிக்கலாம். விரிவாகுமென்று இம்மட்டோடு நிறுத்திக்கொள்ளுகிறோம். இவ்வளவு ஆபத்திற்கிடமான இந்த மசோதாவால் ஜனங்களுக்கு அதிகக்கஷ்டம் ஏற்படுமேயன்றி சுகமென்று வாயால் உச்சரிப்பதற்குக்கூட இடமில்லை. ஆகையால் காருண்யமுள்ள நம் கவுண்மெண்டார் அவர்கள் இந்தமாதிரியான மதஸம்மந்தமாயும் பொதுஜனங்களுக்கு அதிகக் கஷ்டத்தை விளைவிக்கும்படியான மசோதாக்களை அரசாங்கஸபைகளில் பூரவிடாமலும் ஒருஸமயம்வந்தாலும் அதைப்பாஸாகாமல் செய்து ஸகல ஜனங்களுக்கும் க்ஷேமத்தையுண்டுபண்ணவேணுமாகப் பன்முறை அறிவித்துக்கொள்கிறோம். சுபம்.

உபபத்திராதிபர்.

---

# மதிப்புரை,

## நன்மையும் மறுமொழியும்.

இப்பெயர் வாய்ந்ததும், சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகளவர்களால் உபந்யாஸரூபமாக அநுக்கிரகிக்கப்பட்டதுமான விஷயத்தை T. K. ராமபத்திர சர்மா அவர்கள் புஸ்தகரூபமாக அச்சிட்டு நமது பார்வைக்கு அனுப்பியதை வரப்பெற்றோம்.

இதில் நம் தேசத்தில் தற்காலம் ஏற்பட்டிருக்கும் பலவிதமான கஷ்டங்களுக்கும், குருபக்தி இல்லாமையும், நம் ஸநாதன தர்மத்தைக் கைவிட்டதுமே முக்யகாரணமென்று நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அன்னிய தேசத்தினருடைய பாஷையும், பழக்கமுமே இவ்வித நிலைமைக்கு நம்தேசத்தைக்கொண்டுவந்துவிட்டதென்றும் இனியாகிலும் கொஞ்சம் கொஞ்சமாய் அவைகளை விலக்க முயற்சித்தால் கிரமமாக நம் தேசம் நல்லஸ்திதிக்கு வந்துவிடலாமென்றும் அவ்விதமே எல்லாஜனங்களும் பிரயத்னம்

செய்து சிரேயஸ்ஸைப் பெறவேண்டுமென்று விஸ்தாரமாய்க் கூறப்பட்டிருக்கின்றது.

இந்த புஸ்தகம் எல்லாஜனங்களுக்கும் மிகவும் உபயோக மானதென்று சொல்லாமலே விளங்கும்.

இதன் விலை ரூ. 0—3—0

ஏ. கிருஷ்ணய்யர்
கிருஷ்ணவிலாஸ பிரஸ்,
திருவனந்தபுரம்

---

## தமிழுரையுடன்கூடிய மூவ்வேதிகளின் ஸந்தியாவந்தனம்,

---

ஆர்யதர்மாபிவிர்த்தினீ பத்திராதிபரான பிர்மஸ்ரீ க. நடேச சாஸ்திரிகளாலியற்றப்பட்டதும் ஷை யாரால் அனுப்பப்பட்டது மான இப்புத்தகத்தை வரப்பெற்றோம்.

இதில் ரிக்வேதிகள், ஸாமவேதிகள், யஜுர்வேதிகள் என்கிற மூன்று வேதியர்களும் ஒவ்வொரு தினமும் அவசியம் அனுஷ்டிக்கவேண்டிய ஸந்தியாவந்தனத்தை மூலமந்திரங்களை நாகர லிபியிலும் அச்சிட்டு அவைகளுக்குத் தமிழுரையும், ரிஷி, சந்தஸ், தேவதைகளும் அனுஷ்டிக்கவேண்டிய முறைகளும் ஸந்தியாவந்தனத்தின் மஹிமையும் பிராணாயாமம் செய்யவேண்டிய கிரமமும் தமிழில் மந்திரார்த்தங்களும் பதவுரை கருத்துரைகளும் விஸ்தாரமாய் எழுதிவெளியிடப்பட்டிருக்கின்றன. பின்னும் இம்மூவ் வேதியர்களாலும் அனுஷ்டிக்கவேண்டிய ஸமிதாதானமந்திரம் ஔபாஸநமந்திரம் பிர்மயக்ஞம், தர்ப்பணம் இவைகளின் மந்திரம் யக்ஞோபவீததாரண மந்திரம் பீஷ்மதர்ப்பண மந்திரம் இவைகளும் இதில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இக்காலத்திற்கு இப் புத்தகம் மிகவும் உபயோகமானதென்றும், அந்தணர் வம்சத்தி லுதித்தஆர்யர்களுக்குஒவ்வொருவருக்கும் இப்புத்தகம் அவசியம் பார்க்கத்தகுந்தது. என்பதும் நாம் அறிவிக்காமலே விளங்கும்.

இதன் விலை ரூ. 2—4—0

கடலங்குடி, நடேசசாஸ்திரிகள்,
72. பெரியதெரு, திருவல்லிக்கேணி.

---

—உபபத்திராதிபர்.

## சென்னையில் அத்வைத ஆசார்ய சரிதப் பிரசாரம்.

சென்னையில் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்காசாரிய ஸ்வாமிகளது ஏஜண்டான மகா-ா-ஸ்ரீ ஸ்ரீராம சேஷ அய்யர் அவர்கள் முயற்சியால் ஆதிசங்கராசாரியரின் சரிதமும் உபதேசமும் பலவிடங்களில் காலக்ஷேபங்களாயும் உபந்யாஸங்களாயும் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. உபயவேதாந்த வித்வானும் வடமொழி, தென்மொழிவல்லவரும் ஸங்கீத ஸாஹித்ய சதுரரும் சதுச்சாஸ்திர பண்டிதருமான ப்ரம்மஸ்ரீ கொடைவாசல் நரஸிம்மாசார்ய ஸ்வாமிகளவர்கள் ஷை ஆசாரிய சரிதத்தை நான்கு நாட்கள் பக்கவாத்யங்களுடன் காலக்ஷேபம் செய்தார். பல ஜனங்கள் வந்து ஆனந்தமாகக் கேட்டுச் சென்றனர். தாளத்திற்கிசைய ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் பலபாடல்கள் ஸ்வரத்துடன் பாடியது செவிக்கினிமையாகவிருந்தது. நாடகமுறையில் நடிக்கவும் தக்கபடி அமைந்திருந்தது. அப்பண்டிதர் ஸ்வயம் விசிஷ்டாத்வைதியானாலும் அதவைதாசார்யர்களது அருமையான கொள்கையையும் உபதேசத்தையும் கொண்டாடியது அவர் பூர்ண பாண்டித்தியத்தையும் நிஷ்பக்ஷபாதத்தையும் வெளியிடுகிறது. காலக்ஷேபமாக புதுமுறையில் அமைத்தது. இதுவே முதன்மையாயிருப்பதால் ஜீவனத்திற்காகக் காலக்ஷேபம நடத்துபவர் இதைக் கற்றுத் தாங்கள் பயன் பெருவதுடன் ஆசாரியரது பெருமையை எல்லோருக்கும் எடுத்துரைக்கலாம். இப்பெரியார் செய்த உபகாரத்திற்கு நன்றி செலுத்த அத்வைதிகள் கடமைப்பட்டுள்ளார்கள். அன்றியும் இப்பெரியார் ஸர்வேசுவாரது அருளால் சிரஞ்சீவியாயிருந்து இதுபோன்ற பலமதகைங்கரியம் செய்யும்படி வேண்டுகிறோம்.

---

## ஆசாரிய மகிமை.

சென்னையில் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளது ஏஜண்டான மகா-ா-ஸ்ரீ ராமசேஷ அய்யர் அவாகளது பெருமுயற்சியால் ஷை மடத்தில் சென்ற

குருவாரமன்று மாலை 6 மணிக்கு ப்ரஹ்மஸ்ரீயுத ப்ரஸங்கவார தெ. ஸோமதேவசர்மா அவர்களால் ஷை ஆசாரியாவர்களது மஹிமையானது பண்டிதபாமரர்களது உள்ளத்தில் பதியுமாறு வெகு அழகாக உபன்யஸிக்கப்பட்டது.

## உபன்யாஸத்தின் சுருக்கம்.

உலகில் தோன்றிய ஒவ்வொரு பிராணிகளும் அதிவேகமாக ஏதோ ஒன்றை நாடி வேகமாகவும் மந்தமாகவும் ஓடுகின்றன. சிலவை போதியஸாதனங்களிருக்கின்றமையால் அதிவேகமாக ஓடுகின்றன. சிலதோ ஓரிரண்டு ஸாதனங்களைக்கொண்டு மந்தமாகச் செல்கின்றது. எங்கே ஓடுகிறோம். எவ்வளவு ஓடினோம் என்பதையறியாமல் சென்ற வழியே திரும்பத்திரும்பச் செல்கின்றன. இவ்விருளில் திகைத்து நிற்கும் நமக்கு அத்வாவின் கரையான விஷ்ணுபதமெனும் மோக்ஷ ஸாம்ராஜ்யமென உபதேசித்தது வேதமாதா, ஸகல ஸாதனம் நிறைந்தது மானிடப்பிறவி. அதைக்கரையேற்றிவைக்கப் பலர் ஸகாயத்திற்கு வந்தனர். ஆனால் அவர்களே கரையைத்தாண்டமுடியாத குருடராவர். அக்குருடருடன் சேர்ந்து குருட்டாட்டமாடி உடலே இந்திரியங்களே ப்ராணனே மனமே ஆன்மாவென குழியில் தானும் விழுந்து அண்டியவர்களையும் தள்ளினர். அச்சமயத்தில் இருளை நீக்க ஓர் ஆதித்யன் தோன்றினன். அவரே ஆதிசங்கராவார் அவரது ஜன்மோத்ஸவம் விரைவில் இங்கு நடக்கப்போவதால் அச்சமயம்தரிசித்துஜன்மஸாபல்யமடைவோமாக.

தீ. ராமனாத தீக்ஷிதர்.

---

## பிரம்மஸ்ரீ போலகம் சுந்திரசாஸ்திரிகளுடைய
## ஸ்ரீபகவத்கீதா உபன்னியாஸத்தின் சுருக்கம்.

ஸ்ரீ பகவானிடம் அர்சுனன் சொல்வதாவது:— நம்பிக்கையுடன் கூடி யோகத்தில் பிரவேசித்தும் பூரணமாய்செய்யமுயற்சி செய்யாததினாலும், பிராரப்தகருமத்தால் ஏற்பட்ட இச்சரீரம் விழுந்தாலும் அச்சமயத்தில்மனதானது ஆத்மவிருத்தியில் லயிக்காமல் கொஞ்சம்போகவாஸனையின் உத்போதத்தாலும், யோகத்தினாலுண்டாகும் பயனை அடையமாட்டானல்லவா. அவன்கெதி

என்னவாகும்? மேலும் அவன் யோகத்தில் பிரவேசித்ததனுல் இப்போது கருமானுஷ்டானம் செய்யவுமில்லை. அப்பியாச வைராக்கியாதி சாதனங்களினுல் முழு முயற்சியின்மையால் ஞானேதய சித்தியாகிய மோக்ஷத்தைபடையவுமில்லை. ஆகையால் ஒருயோகத்திலும் பிடிப்பின்றி சிதறிப்போன மேகம் எப்படிப்பலனைக் கொடுக்காமல் பிரயோஜனமின்றிப்போமோ அப்படி இவனும் கருமப்ரஷ்டனும்யோகபிரஷ்டனுமாகி நாசமடையமாட்டானு? இந்த என் ஸந்தேகத்தை நிவர்த்திசெய்ய நீர்தான் தகுந்தவர். உம்மைத்தவிற வேறு எவராலும்இதைநிவர்த்திக்கமுடியாது.

ஸ்ரீகிருஷ்ணபகவானின் உத்தரம்:—நீ சொல்கிற அந்த யோகப்பிரஷ்டன்இகலோகத்திலாவது பரலோகத்திலாவதுநாசமடைகிறதேயில்லை. அதாவது இவ்வுலகில் அவன் நல்ல காரியத்தைச் செய்திருப்பதால் சிஷ்டர்கள் அவனை நிந்தியார்கள். பரலோகத்திலும்நரகானுபவம்ஏற்படாது.கல்யாணமென்றுசொல்லப்படுகிற சாஸ்திரவிகித தர்மத்தையனுஷ்டிப்பவன் கெடுதியை ஒருநாளும் அடையமாட்டான்.

(தொடரும்) வி. என். ராமநாதன்.

# ஸநாதனதர்மப் ப்ரசாரம்.

சென்னை ஸ்ரீ அமரகலாவிலாஸினீ ஸபையினுதரவில் பல லௌகிக மஹாஜனங்களது பிரார்த்தனைக்கிணங்கி பிரும்மஸ்ரீ பா ஸங்கவர வெ, ஸோமதேவசர்மா அவர்கள் மாம்பலத்தில் பற்பல விடங்களிலும் ப்ரதி பானுவாரத்திலும் மாலையில் ஸநாதனதர்மத்தைப்பற்றிப் பலஉபன்யாஸங்கள் நடத்திவருகிருர்கள். தர்மம் (1) தர்மப்ரமாணம்(2) வேதவித்யா(3) வேதாங்கம்(4) ஸம்ஸ்காரம் (5) முதலியவைகளைக் குறித்து தற்காலத்திற்கேற்க பலலௌகிக வைதிக உதாஹரணங்களைக்கொண்டு எல்லோர் மனதிலும் பசுமரத்தாபோல் பதியும்படி அழகாக உபன்யாஸம்செய்து வருகிருர். முதல் உபன்யாஸச்சுருக்கம் வருமாறு—ஸகலஜீவராசிகளும் நற்கதிபெற வழிகாட்டுவது தர்மம். பாரதநாட்டவரைத் தவிர ஏனையோர் அவரவர் ஆசாரியர்பெயரால் அதை மதமென அழைக்கின்றனர். நம்மவர் தர்மமெனக் கூறுவது கட்டாயம் அதை அனுஷ்டிக்க

வேண்டுமெனும் கடமையை வற்புறுத்துவதாம். ஸநாதனமென்பது எப்போதும் அழிவில்லாப்பொருளைக் கூறும், அது முழுமுதற்கடவுளான பிரம்மமேயாகும். அதைப்பற்றிகூறும் தர்மம் ஸநாதநதர்மம்.

ஆதலால்தான் ஆசாரியன்பெயர் அத்வைத விசிஷ்டாத்வைத த்வைதாதி மதங்களிடமும் காணப்படவில்லை. அன்னியரால் இது ஹிந்துமதமெனக் கூறப்படுகிறது. எந்தப் பண்டைய நூல்களிலும் இப்பெயர் காணப்படவில்லை. இதற்குப் பற்பல விதமானபொருள் கூறப்படுகின்றன. மஹம்மதியரால் நிந்தார்த்தமாக நாம் ஹிந்துவென அழைக்கப்பட்டோமென சிலர் கூறினர். சிலரோ ஹிந்துநதிதீரத்திலிருந்து ஆரியர் இம்மதத்தைத் துவககியதால் ஸிந்துவென்பதற்குப்பதிலாக ஹிந்துவெனப்பட்டோம் என்பர். இவ்வாதம் இருபதாண்டுகளுக்கு முன் பண்டிதகோஷ்டியில்பிறந்து வளர்ந்து ஓய்ந்தது. விராட்புருஷனது ஹிருதயத்திலிருந்து சந்திரன் உதித்தால் இது அவர் ஹிருதயஸ்தானமானதாலும் இந்து "சந்திர" நாடு எனப்பெயருண்டானதென வாதித்தனர். "ஹிடி ஹிண்ட்" எனற தாதுக்களிலிருந்து வந்ததெனும் வாதத்திற்காகக்கூறினர். உண்மையாக "ஸநாதனதர்மம்" "ஆர்ய தர்மம்" என்றே எங்கும் காணப்படுகிறது என்பதாம்.

தி. ராமநாதன், காரியதரிசி.

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீராமானுக்ரஹத்தால் சென்ற சிலமாதங்களாக மாம்பலம் ஸ்ரீ ராமமந்திரத்தில் பிரதிதினமும பிரும்மஸ்ரீ. வெ. ஸோமதேவசர்மா அவர்களால் ஸ்ரீமத் வால்மீகிராமாயணம நடததப்பட்டு வருகிறது. அதில் உபாஸநாகாண்டமான ஸ்ரீ சுநதிரகாண்டம் (16—4—27) வெள்ளிக்கிழமை இரவு 8-30 மணிக்கு ஆரம்பித்து வழக்கம்போல் பிரதி தினமும் விசேஷ அர்த்தத்துடன் அன்னவராலேயே அழகாக நடததப்படும். ஸ்ரீ ராமலக்ஷ்மணாஞ்சநேய ப்ராஸாதத்தால் இகபரசுகத்தைப் பெறக் கதாச்ரவணம் செய்யும்படி பிரார்த்தனை.

ராமபக்தர்கள். ஸ்ரீ ராமமந்திரம் மாம்பலம்.

---

பிரதிதினமும் காலை 8மணிக்கு தர்மத்திற்கு வேதகாவ்யபாடம் ஷ சர்மாவால் நடத்தப்படும்.